www.padippakam.com

# ஏழைதாசன்

□ 7—9 □ செப்டம்பர்'99 □ விலை ரூ. 2/-

★ 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' — கண்ணதாச

ஏழைகளின் அகவரியாளர்!
கவிதைகளின் முகவரியாளர்!



## கவிஞர். எழிலன்

முன்னாள் கிளைச் செயலாளர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
49497 - மெட்டின்ஜென்,

படிப்பகம்

# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

எய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் சான்றுகளுடன் வர வேண்டும்.

நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.

**H.I.V.** கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு 'P 24 ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை முறையே போதும். வெஸ்ட்ரன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து சிலகாலம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

மருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் தலைவராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

## அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம்" 7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.
(மனோன்மணி ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்மணி ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.

**பேரையூர் வருவதற்கு வழி :** மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் மதுரை வந்து பழங்காநத்தம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்படும் 'சாப்டூர்' பஸ்ஸில் ஏறி T.கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம். தெற்கிலிருந்து வருபவர்கள் விருதுநகர் பஸ் ஸ்டாண்டிலிருந்து கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க வெள்ளி விழா 7-வது மாநாடு

நாள் : 27, 28, 29-8-99. ★ இடம் : வாணிமகால், தி.நகர், சென்னை

தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ்மறை ஓதுதல் : பாவலர். கதிர். முத்தையன்

அறிமுக உரை : இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்

தலைமை : பேரா. இர.ந. வீரப்பனார்
தலைவர், உ.த.ப இ., தலைமையகம்-மலேசியா.

முன்னிலை : திரு கே.ரி. கணேசலிங்கம்
தலைமையகப் பொதுச் செயலாளர், செர்மனி.
திரு. பாலபாரி பாலசுப்பிரமணியன்

வரவேற்புரை : திரு. மு. அந்தாலனார்

கொடியேற்றுதல் : திருமதி. சாலினி இளந்திரையன்

தொடக்கவுரை : திரு. பழ. நெடுமாறன்

★ சிறப்பிக்கவுள்ளத் தமிழ்ப் பெருமக்கள், அமைச்சர்கள், அறிஞர்கள் ★

மாண்புமிகு முனைவர். மு. தமிழ்க்குடிமகன்

மாண்புமிகு. முல்லைவேந்தன்

மாண்புமிகு டத்தோஸ்ரீ. ச. சாமிவேலு மலேசிய அமைச்சர்

மாண்புமிகு சௌ. தொண்டமான் இலங்கை அமைச்சர்

புரவலர் பாவலர் வி.ஜி. சந்தோசம்

திரு கா. ராசாமுகமது, முன்னாள் அமைச்சர்

திரு. கா. வேழவேந்தன், முன்னாள் அமைச்சர்

புரவலர் நா. அருணாசலம்

முனைவர். க.ப. அறவாணன், துணை வேந்தர்

மருத்துவப் பேராசிரியர் செ.நெ. தெய்வநாயகம்

முனைவர். தமிழண்ணல்

முனைவர். இரா. திருமுருகனார்

பேராசிரியர். சுப. வீரபாண்டியன்

புலவர். இறைக்குருவனார்

படிப்பகம்

முனைவர். இரா. சனார்த்தனன்

www.padippakam.com

பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா
பேராசிரியர். அக்கினிபுத்திரன்
முனைவர். கடலூர் மணிமாறன்
புலவர். த. சுந்தரராசன்
பாவலர். மு. இராமச்சந்திரன்
பேராசிரியர். சி. இராமமூர்த்தி, பெங்களூர்
கவிஞர். ஆ. சி. விசுவநாதன், பெங்களூர்
பேராசிரியர். ம. கருணாநிதி
பேராசிரியர். மு. நாகநாதன்
திரு. இரா. தமிழ்வாணன்
திரு. எ. கலைமன்னன்
திரு. குரு. ஆறுமுகம்
வீராங்கனை பவானி மதுரகவி, புதுச்சேரி
திரு. சேவியர் அருள்ராசு
வழக்குரைஞர். இரா. செயபாலன்
வழக்குரைஞர். ப. அமர்நாத்
தனித்தமிழ் முரசு ச. அழகுஒளி
திருக்குறள் நா. சண்முகனார்
திரு. நன்னன் (த.நா.மா.லெ.க.)
தேன்மொழி (ஆசிரியர், உழைக்கும் மகளிர் முழக்கம்)
ஓவியர். கு. ஒளிவென்றி, புதுவை
திரு. கோ. பாலசிவலிங்கம், புதுவை
திரு, யோகி. தி.ஆ. கிருட்டிணன், சென்னை
திரு. தவ. பழனியப்பன்
பாவலர். திரு. தமிழமுதன்

## வெளி நாட்டுப் பேராளர்கள்

மலேசியா : திரு. மு. மணிவெள்ளையன்
,, பி.எசு. வெங்கடேசன்
,, ப.கு. சண்முகம்
,, மா. அன்னியப்பன்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| | | திருமதி. வீ. பொன்னி கணேசன் |
| | | திரு. நா. மணியன் |
| | | ,, பத்மநாதன் |
| | | ,, ஏகாம்பரம் |
| | | ,, சின்னப்பன் |
| | | ,, சொக்கலிங்கம் |
| | | ,, சுப. சிதம்பரம் |
| | | ,, எசு. இராமகிருட்டிணன் |
| | | ,, து. குப்புசாமி |
| செர்மனி | : | பாவலர். நா.சி. கமலநாதன் |
| | | திரு. இராசையா தனபால சுந்தரம் |
| | | ,, தம்பையாராசன் |
| | | ,, சின்னத்துரை இராசகர்ணா |
| | | ,, க. கதிரவன் |
| | | திருமதி. சரோசாதேவி |
| அமெரிக்கா | : | திரு. இராம்குமார் |
| | | ,, வ.ச. பாபு (ஏழைதாசன் உறுப்பினர்) |
| | | ,, கே. இராமையா |
| மியான்மர் (பர்மா) | : | ,, ரெ. மாரிமுத்து |
| | | ,, வ.க. வல்லமைச்சன் |
| | | ,, பெரியார் டி.எசு. மணி |
| கனடா | : | ,, சி. செல்லையா |
| | | திருமதி. செல்லையா |
| | | திரு. கே.பி. கனக்சு |
| சுவிற்சர்லாந்து | : | ,, பொன். முருகவேள் |
| பிரான்சு | : | ,, அலன் ஆனந்தன் |
| | | ,, ப. சண்முகசுந்தரம் |
| | | ,, வீ. தேவகுமாரன் |
| | | திருமதி. பானுமதி அலன் ஆனந்தன் |
| ரியூனியன் | : | திரு. வீ. குமாரசாமி |
| தென்னாப்பிரிக்கா | | திருமதி. காமாட்சி சோதிநாதன் |

படிப்பகம்

www.padippakam.com

தமிழீழம் : பேரா. கா. சிவத்தம்பி
திரு. ஆ. சண்முகலிங்கம்
,, பொன். பூலோகசிங்கம்
,, இ. தவகோபால்
டாக்டர். சற்குருநாதன்
திரு. வைரமுத்து கோவிந்தபிள்ளை
,, செயந்திகுமார்
,, எசு. எசு. கந்தசாமி
,, குணராசா
,, சி. வரதராசா
பிலிப்பைன்சு : ,, எம். செகதீசுவரர்
மொரிசியசு : ,, பழனியாண்டி
ஆங்காங் : ,, கருணை கமால்
பாங்காக் : ,, வீ. நாகராசு
,, அயூப்
இந்தோனேசியா : ,, மு. சிரீராமுலு
சகர்த்தா : ,, ஸ்ரீபதி
தாய்லாந்து : ,, சொங்கிட்சாமி
சீசெல்சு : ,, மு. நடேசன்
,, ம. மனோகரன்
சுவிட்சர்லாந்து : ,, சிவ. பாலசிங்கம்
ஆத்திரேலியா : ,, ந. சிறீகந்தராசா
,, பாவேந்திரா
திருமதி சிறீதேவி
நியூசிலாந்து : மருத்துவர். ம. இராசநாதன்
இலண்டன் : திரு. அரங்க முருகையன்
திருமதி. சுசாதா
ஆலந்து : திரு எசு. நடேசமூர்த்தி
பப்புவா நியூகினி : பாவலர் அம்பிகைபாகர்
சிங்கப்பூர் : திரு. இ வி. சிங்கம்
பாவலர். பெ.ரி.நில. பழநிவேலன்

இந்திய ஒன்றியப் பேராளர்கள் :

திரு. வீர. மதுரகவி, புதுச்சேரி
திரு. இரா. இரத்தினகிரி, தஞ்சை
படிப்பகம் உலகநாதன், பெங்களூர்
பாவலர் முல்லைவாணன், சென்னை

www.padippakam.com

# 'எய்ட்ஸ்' தடுப்பு மொழிகள்

111. ஆகாவென்றே உடல்நலம் பெருக;
யோகாசனம் இன்றே பயில்க!

112. சித்த மருத்துவத்திற்கு வாருங்கள்.
சிரமம் சிறிதுமில்லைப் பாருங்கள்!

113. வெள்ளை அணுக்கள் உடலுக்குக் காப்பு.
கொள்ளை வேசியால் உயிருக்கு ஏ(ய்)ப்பு!

114. மனைவி மட்டுமே சொர்க்கத்தின் திறவுகோல்.
மற்றவள் எல்லாம் நரகத்தின் அளவுகோல்.

115. ஆணுறை ஒன்றே சுதாரிப்பு முறை.
ஆரோக்கிய வாழ்வின் பராமரிப்பு முறை.

— ஏழைதாசன், புதுக்கோட்டை-2

---

## சந்தா விபரம்

உள் நாட்டுச் சந்தா :

- ஆண்டுச் சந்தா : ரூ. 25/-
- ஆயுள் சந்தா : ரூ. 250/-

வெளிநாட்டுச் சந்தா :

- ஆண்டுக்கு யு.எஸ். டாலர் 10.
- ஆயுளுக்கு யு.எஸ். டாலர் 100.

தொடர்புக்கு : எஸ் விஜயகுமார், ஆசிரியர்-வெளியீட்டாளர், ஏழைதாசன் மாத இதழ், அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002.
(காசோலையை எஸ். விஜயகுமார் என்றப் பெயருக்கு ஏடுக்க வேண்டும்.)

---

- **இதழுக்கு சந்தாதான் ஊக்குவிப்பு;**
**இணையும் உள்ளங்களுக்கு கைக்குவிப்பு.**

படிப்பகம்

www.padippakam.com

# ஹைக்கூப் பூக்கள்...

☐ வானவில்லைச் சுமந்தபடி
எப்படிப் பறக்கிறாய்?
வண்ணத்துப் பூச்சியே!

☐ ஐ.நா. சபையாம்...
உலக சமாதானமாம்...
போர் மட்டும் வளைகுடாவில்!

☐ தை பிறந்து வழி தெரிந்தும்
பெண் பிறந்து
ஏன் சுமை கண்டீர்?

☐ வறுமை ரேகைகளே
வரப்புகளாய்...
ஏழை விவசாயிகள்!

☐ நாத்திகனுக்கு
பதில் சொல்லியது...
பாறைக்குள் தேரை!

☐ பெண் சிசு
என்ன பாவம் செய்தது?
கள்ளிப் பாலே!

☐ கெஞ்சிக் கேட்கிறேன்
இயற்கையை அழித்து விடாதே
21-ஆம் - நூற்றாண்டே!

வழங்குபவர் :
- பா. மனோகர்
செய்யாறு திருவண்ணாமலை

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

ஏழைதாசன் ஆகஸ்டு இதழை வாசித்தேன். பேரணமல்லூர் சேகரனின் 'மனசு' கவிதை உண்மையிலேயே மனதைப் பிழிந்தது. அருள்மொழிவேந்தனின் 'பிணைப்பு' கவிதை ஒரு புதிய கண்ணோட்டம் கொண்டிருந்தது. "நாள்தோறும் சேகரிக்கிறேன் / நல்ல நல்ல கனவுகளை. தனிமையில் இவைகளைத்தான் செலவு செய்கிறேன் / உன் நினைவை வாங்குவதற்கு" — தமிழ்ச்செல்வியின் இந்தக் கவிதை வரிகள் அடடா...! சொல்ல வைக்கிறது. ஏழைதாசனின் இலக்கிய வேள்வி... புரிகிறது. நாளை சரித்திரம் பேசும். இன்று அதற்காகத்தான் இரண்டாண்டுச் சந்தா இணைத்துள்ளேன்.

— பாவலர் **கருமலைப் பழம் நீ**, சென்னை-39

அண்ணாவின் அருமைத் தம்பி; வண்ணக் கவிதைத் தும்பி! எனத் தலைப்பிட்டு பாஅரசு கா. வேழவேந்தன் அவர்களின் படத்தை முகப்பில் வெளியிட்டு, உள்ளே கட்டுரையும் எழுதியுள்ளீர்கள். பாவலர் வேழவேந்தனார் தமிழக மரபுப் பாவலர்கள் வரிசையில் முதல் அணியினர். அவரைப் பாராட்டிய ஏழைதாசனைப் பாராட்டுகிறேன்

— பாவலர் **எழுஞாயிறு**, சேலம்-7

கம்பீர நடைக் கவிஞர் வேழவேந்தனைப் பற்றி, அறிமுகம் செய்து, அவருக்கு உங்கள் மதிப்பை வெளிப்படுத்தி இருப்பது பொருத்தமே இன்னும் சற்று பக்கங்கள் கூட்டினால் நல்லது.

— **சி. விநாயகமூர்த்தி**, பழநி

தங்களின் இதழ் 69 கிடைத்தது. சிற்றிதழ் வரலாற்றில் உங்களது தொடர் ஓட்டம் என்னை வெகுவாய் ஆச்சர்யப் படுத்துகிறது. வளரட்டும் தங்கள் இதழ்ப் பணி. ஜெர்மனி கவிஞர் எழிலனின் கவிதை இதயத்தை ஈர்த்தது.

— **தி.மா. சரவணன்**, திருச்சி-21

தமிழ் மொழிக்காகவும் தமிழ் இனத்துக்காகவும் தொண்டாற்றிய சான்றோரை அட்டையில் பிரசுரித்து, பெருமைப் படுத்துவது - அறிமுகபடுத்துவது பாராட்டுக்குரியது. கவிஞர் எழிலன் அவர்களின் கடைசி இரண்டு வரிகள் மனதை மிகவும் தைத்தது. "திரும்பிடும் திசைகள் எல்லாம் ஏழைகள் நிறைந்தே நின்றால் வருகின்ற சந்ததிக்கும் விடிவு இல்லை புரிந்து நிற்பாய்" என்றக் கனல் வரிகள், உண்மை வரிகள் கவிஞர் மு. தமிழ்ச்செல்வியின் கவிதைகள் அனைத்தும் நிறைவாய் உள்ளன. அவருக்கு என் வாழ்த்துக்கள்.

— செல்வி **ஜூ. மஞ்சு**, திருப்பூர்

படிப்பகம்

www.padippakam.com



© 25437

# தாகூர் மெட்ரிகுலேசன் பள்ளி

# தாகூர் பயிற்சிப் பள்ளி

1, சங்கரமடம் சாலை, ★ மேல 6-ம் வீதி,

புதுக்கோட்டை.

□ □ தரம் நிறைந்த கல்வி

★ ★ நியாயமான கட்டணம்

● ● நன்கொடை இல்லை

□ □ LKG, UKG, to VII Std.

பொன். தங்கராசு M.A,M.Ed.,
முதல்வர்.

படிப்பகம்

www.padippakam.com

# ஏழைகளின் அகவரியாளர்! கவிதைகளின் முகவரியாளர்!



ஜெர்மனியில் வாழும் அமலேந்திரன் எனும் இயற்பெயருடைய இவர்தான் கவிஞர் எழிலன். இலங்கைக் கொழும்பு மாநகரில் பிறந்தார், பெற்றோர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். தந்தைக்கு ஊர் மணப்பாடு; தாயாருக்குப் பாளையங்கோட்டை. இவர் மனைவியார் பெயர் விஜயராணி; மகன்கள் தினேஷ் (22), திபேஷ் (20). மகள் ஷியாமிளாருதயானா (13) மூவரும் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவரின் தாயார் ஊட்டியத் தமிழ் ஆர்வமும் இவர் பெற்றோர்களின் பாடும் திறமையும் இவ்வழியில் ஈர்த்துவிட்டதுடன் தந்தையாருக்கு இருந்த கவிதை பாடும் பழக்கம் இவருக்கும் பிறவியிலேயே வந்திருக்கிறது.

தொழில் கருதி தாயகம் விட்டு கொழும்பில் இவரது தந்தையார் குடியேறிய காலத்தில்தான் இவரின் தாயாரைக் கண்டு மனதில் பதித்திருக்கிறார். அந்தக் காதல் கதையை அவரே பெருமையாக ஒரு தடவை எழிலன் வளர்ந்த பின்பு கூறினராம். மாணவப் பருவத்திலேயே 'எழில்' என்றப் பத்திரிகையை நடத்தியுள்ளார். அதன் ஆசிரியராக எழிலன் என்றப் பெயரில் எழுதியுள்ளார். முன்னாள் மாணவர் சங்கத் தலைவராக இருந்தபோது 8 ஆண்டுகள் 'முன்னோடி' என்றப் பத்திரிகை நடத்தியுள்ளார். கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், பட்டிமன்றங்கள், பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல தடவை முதல் பரிசு பெற்றுள்ளார்.

அது மட்டுமின்றி பல கழகங்களிலும் சங்கங்களிலும் தலைவராகவும் செயலாளராகவும் செயல்பட்டிருக்கிறார். கிறிஸ்தவ இளைஞர் கழகத் தலைவராக இருந்த போது இயற்றிய கீதத்திற்கு இலங்கை முழுவதுமாக நடந்த கவிதைப் போட்டியில் முதல் பரிசு வென்றிருக்கிறார். ஜெர்மனியில் வெளிவரும் 'தமிழருவி', 'பூவரசு', 'இளைஞன்' போன்றத் தமிழ் ஏடுகளில் கவிதைப் போட்டியில் முதல் பரிசுகளும் தங்கப் பதக்கங்களும் கிடைத்துள்ளன

இவரின் முதல் நூலான 'புதியதல்ல... புதுமையுமல்ல...' பாரத ஸ்டேட் வங்கி நடத்திய சிறந்த நூல்களுக்கானப் போட்டியில் இரண்டாம் இடத்தை வென்றதோடு தமிழக நூலக ஏற்பும் பெற்றது. இரண்டாவது நூலான 'இரவல் இதயங்கள்' கடந்த ஆண்டு சென்னையிலும் ஜெர்மனியிலும் வெளியிடப்பட்டது. முதல் நூலின் 1000 பிரதிகள் மலேசிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்துக்கு அன்பளிப்புச் செய்து அதன் விற்பனை வரவை ஏழைக் குழந்தைகள் கல்விக்கு உதவச் செய்திருக்கிறார். முன்பு இவ்வியக்க கிளைச் செயலாளராகவும் பணியாற்றி உள்ளார். வாழ்த்துக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# கூவத்தின் கரையினிலே..

சமத்துவபுரத்தில் என் வீடு.

எல்லோருடைய வீட்டு
மிச்சச் சோற்றையும் தின்று
வளர்ந்ததொரு நாய்,
அது, காரில் சிக்கி இறந்ததொரு நாள்.

காரை மறித்து காசு வாங்கிய கபாலி,
கள்ளுக்கடையில்...

நாயை அப்புறப்படுத்த,
நகராட்சி ஊழியருக்கு
நானூறு ரூபாய் கணக்கில் செலவு.

அதற்கென வந்தத் துப்புரவு ஊழியர்
போனஸ் சரக்கு அழைக்கவே
அருகிலிருந்த புதரில் எறிந்துவிட்டுப் போனார்.

நான்கு நாட்களில் நாறத் துவங்கியது
அப்புறம்தான் தெரிந்தது
எங்கள் தெருவில் என்னோடு சேர்த்து
எத்தனை பேருக்கு மூக்கில்லை என்பது.

மூக்கிருந்த சிலருக்கும்
மூக்கைப் பொத்திக் கொள்ள அல்லாமல்
நாற்ற மூலம் காணவோ
அப்புறப்படுத்தவோ நேரமில்லை.

ஒரு வாரத்தில் நாற்றம் அதுவாகவே
அடங்கிப் போனது.

இப்படித்தான் நாறிக் கொண்டிருக்கிறது
நாயும் — நம் நாடும்!

- சோ. கிருஷ்ணகுமார்
கிணத்துக்கடவு, கோவை

படிப்பகம்

www.padippakam.com

# பாவலர் எழுஞாயிறு இலக்கிய அறக்கட்டளை

பாவலர் எழுஞாயிறு இலக்கிய அறக்கட்டளையின் ஆறாவது இலக்கிய விழா 1-8-99 ஞாயிறு மாலை சேலம் தமிழ்ச் சங்க மேல் மாடியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு **இரா. சிங்காரம்** தலைமை வகித்தார்.

பெரு. இளங்கம்பன் வரவேற்றுப் பேசினார்.

**ஜேஸி. கு. எத்திராஜ்** முன்னிலை வகித்தார்.

'ஏடை மேடை' என்னும் நிகழ்ச்சியில் இலக்கியப் புரவலர் **கே.கே. திருமால்ராவ்** சிறப்புரையாற்றினார்.

சேலம் கல்வி மாவட்டத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவன் கோகுலநாதபாலாஜியைப் பாராட்டி ஆசிரியர் வின்செண்ட் பேசினார்.

பொ. துரைசாமி தலைமையில் கவியரங்கம் நடந்தது. கி சரவண குமார், கோனூர் வைரமணி, அ, விஜய்நிவாஸ், பாசு. தமிழடியான், சூர்யநிலா, அ. கார்த்திகேயன், வ. முத்துமாரய்யன், வே பாபு, பெ. செந்தில்குமார், சேலம் ஆறுமுகன், தாதை உபதேசி, சுபஸ்ரீ முருகேசன் ஆகியோர் கவிதை வாசித்தனர்.

சென்ற மாதம் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதல் பரிசினை அ. விஜய்நிவாஸும் இரண்டாம் பரிசினை பி. அனிதாபிரியனும் மூன்றாம் பரிசினை முபாரக்அலியும் வென்றார்கள்.

'கணம்' என்றத் தலைப்பில் நடத்தப்பட்ட உடனடி கவியரங்கில் வென்ற வ முத்துமாரய்யன், கி. தமிழ்வேல், கோனூர் வைரமணி ஆகியோருக்கு பாவலர் எழுஞாயிறு பரிசுகள் வழங்கினார்.

கூட்டத்தில் க.வை. பழனிசாமி, சந்தியூர் கோவிந்தன், க. இந்திரசித்து, செ.சி. இளந்திரையன், க. சக்கரபாணி, மு. இளங்கோ, ல. ஆனந்தி, சக்தி அருளானந்தம், சாந்தா சிவம், சுமதி, கு. நவநீதகிருஷ்ணன் ஆகியோர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**பாசு. தமிழடியான்** விழாவினை த்தொகுத்து வழங்க- **சூர்யநிலா** நன்றி கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com

# ஹைக்கூப் பாக்கள்

★

வெள்ளை நிறச் சுவர்
அழுக்கானது
தேர்தல் காலம்!

★

பூக்களும் பாரமோ
வாடியிருக்கிறதே
பூக்காரியின் முகம்!

★

வீட்டை சுமந்து கொண்டு
வீடு தேடி அலைகிறது
கூட்டை சுமந்த நத்தை!

★

முடிவுக்காக காத்திருந்தேன்
முடிவில்தான் தெரிந்தது
மீண்டும் ஒரு தொடக்கம்!

★

பசியின் கொடுமைத் தெரியுமா
பட்டினிக் கிடந்துப் பாருங்கள்
பணக்காரர்களே!

★

ஜன்னலைத் திறந்து வை.
உள்ளே வரட்டும்
மழைச் சாரல்!

★

சிறைப்படுத்தினாலும்
வளர்ந்து கொண்டுதானிருக்கும்
தொட்டிச் செடி!

★

- ஷரான். குமார்
சேலம்-6

படிப்பகம்

www.padippakam.com

# தீர்வு செய்ய முடியாத நோயா!

எமது மருத்துவமனையில் நாள்பட்ட சகல வியாதிகளுக்கும் யுனானி, வர்ம இயல் மருத்துவம், மனோதத்துவம் (ஹிப்னாடிசம், மெஸ்மெரிசம்) அல்ரா அக்குபஞ்சர், மின்காந்த சிகிச்சை போன்ற மருத்துவ முறையில் பின் விளைவுகளோ, அலர்ஜி கெடுதல்கள் போன்றவையோ இல்லாத எளிய ஒருங்கிணைந்த மாற்று மருத்துவ சிகிச்சை முறைகளின் மூலம் குணப்படுத்துகிறோம்.



மாற்று இயல் மருத்துவ முறையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று பல சமூக சேவை மையங்களுக்கு சிறப்புத் தலைமை மருத்துவ ஆலோசகராகவும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சிகிச்சை அளித்து மருத்துவ சேவை புரிந்துவரும்.

**Dr.இ. ஜாகிர் உசேன் M.A.,Ph.D.,**

அவர்களின் நேரடிப் பார்வையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## *கவனிக்கப்படும் சில முக்கிய வியாதிகள்*

மனநலம் குன்றியவர்கள், சித்த பிரமை, பைத்தியம், தூக்கமின்மை, அமைதியின்மை, ஞாபக மறதி, நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, முகவாதம், பக்கவாதம், மூளை வளர்ச்சி இல்லாத குழந்தைகள், மது, போதை மருந்து சாப்பிட்டதனால் ஏற்படும் பின் விளைவுகள், பரு, மரு, ஆஸ்துமா, அலர்ஜி, ஆண்மை, பெண்மை இன்மை, மூட்டுவாத எலும்புத் தேய்வு, இன்னதென்று தீர்வு செய்ய முடியாத நோய்களுக்கும் மற்றும் நாள்பட்ட அனைத்து வியாதிகளுக்கும், ஆலோசனைக்கும், சிகிச்சைக்கும் முன்கூட்டியே அனுமதிபெற்று வர வேண்டுகிறோம்.

# அல்-ஷா மருத்துவமனை,

யாதவர் தெரு, அச்சிறுபாக்கம் - 603 301.

படிப்பகம்

☎ STD : 04115 22162, 22404.

R.C. No. 3914 / 96 ★ POSTAL No. TN / PDK / 16 / 92.
www.padippakam.com

## ஆசிரியர் தொகுதி

### இதழ் எண் : 70

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு சுதந்திரமான செயல்தரமிக்க ஆட்சி அமைய நமது வாக்குகளைப் பயன்படுத்துவோம். சாதிப் பெயர்களைச் சொல்லி ஓட்டுக் கேட்கும் கட்சிகளைப் புறக்கணிப்போம் தொகுதிக்குப் பணியாற்றக் கூடிய வேட்பாளரை நாம் அடையாளம் காட்டுவோம். மீண்டும் ஒரு தொங்கு பாராளுமன்றம் அமைந்து விடாது நமது வாக்குச் சீட்டுக்களைச் சிந்தித்து செயல்படுத்த வேண்டியது காலத்தின் நிர்ப்பந்தமாகி உள்ளது. அறுதிப் பெரும்பான்மை பெறக்கூடிய கட்சியால் மட்டுமே திறமையான வளமையான சட்டத் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்பது நாமெல்லாம் உணர்ந்த அழுத்தமானப் பாடமல்லவா! போலியாகவும் புகழுக்காகவும் மக்களாட்சித் தத்துவத்தையே கேலிக் கூத்தாக்குகிற சுயேட்சைகள் படையெடுப்பைத் தடுத்திருப்பதும் தாரை தப்பட்டம் சகிதமாக ஊரையே அல்லோலப்படுத்தி, கட்-அவுட் வளைவுகள் வைத்து தேர்தல் திருவிழா கொண்டாடி வந்த கட்சிகளின் ஆடம்பர ஆர்ப்பாட்டங்களைக் குறைத்திருக்கும் தேர்தல் ஆணையத்தால் சாதாரண பொதுமக்களாகிய நமக்கெல்லாம் எவ்வளவு பெரிய ஆறுதல்!

## இலவச மருத்துவ முகாம்

கீழ்த்தாங்கல் தமிழ்நாடு காடு வளர்ப்புத்திட்டம் சார்பாக, போளூர் மாற்றுமுறை மருத்துவ சிகிச்சை மையம் & நேதாஜி சேவா சங்கம் & அச்சிறுபாக்கம் இயற்கை சுகாதார மையமும் இணைந்து இலவச சித்த, மூலிகை மருத்துவ முகாமை நடத்தின Dr. ஹக்கீம் M.S. நவாஸ் மற்றும் Dr. E. ஜாகிர்உசேன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி சிறப்பு சிகிச்சை அளித்தனர்.

★ பதிவு பெற்ற இதழ் ★

1903, வடக்கு ராஜ வீதி, புதுக்கோட்டை-1ல்
எஸ். முருகையாவால் நியூ பழனி பிரிண்டர்ஸில் அச்சிட்டு,
வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்.
படிப்பகம்